සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 07

**அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்**
**அக்கரைப்பற்று**

புள்ளி

சுட்டெண்: .........................

## செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்

நேரம்:1.30 மணித்தியாலம்

### பகுதி - I

- சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. பயிர்ச்செய்கைக்கு இன்றியமையாத அடிப்படைக் காரணி
    1) வளி  2) நீர்  3) மண்  4) சூரிய ஒளி

02. சிதைவடையாத கழிவுப் பொருள்
    1) உணவுக் கழிவு  2) சமையலறைக் கழிவு
    3) விலங்குக் கழிவு  4) குளிர்பானப் போத்தல்கள்

03. பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் நன்மையாக
    1) தாவரங்களுக்கு போசணை குறையும்  2) மண்ணிலுள்ள நீர்த்தன்மை கூடிக்குறையும்
    3) மண் தூர்வையாக்கப்பட்டு வளமடையும்  4) தாவரங்கள் வளர நீண்ட நாள் எடுக்கும்

04. நாற்றுக்களாக உருவாக்கப்பட்டு களத்தில் நடப்படும் பயிர்
    1) தக்காளி  2) பயற்றை  3) பூசனி  4) பாகல்

05. நிலக்கீழ் தண்டு அல்லாதது
    1) மஞ்சள்  2) இஞ்சி  3) வாழை  4) பாகல்

06. தரையலங்கரிப்பிற்காக பயன்படுத்தப்படும் கூறு
    1) சிறுகூறு  2) பெருங்கூறு  3) மென்கூறு  4) நடுநிலை கூறு

07. தரையலங்கரிப்பில் தாவரங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள்
    1) நிழல் கிடைத்தல்  2) உணவுக்காகப் பயன்படல்
    3) சூழலை கவர்ச்சிகரமானதாக்குதல்  4) மேற்கூறிய யாவும் சரியானவை

08. தரையலங்கரிப்பின் போது தாவரங்கள் பயன்படுத்தப்படும் முறைகள் அல்லாதது
    1) பெருமரங்கள்  2) சிறுபயிர்கள்  3) புதர்கள்  4) விளிம்புகள்

09. வண்டி இழுத்தலுக்குப் பயன்படும் விலங்கு
    1) எருது  2) முயல்  3) பாற்பசு  4) நாய்

10. வீட்டு வளவில் விலங்குகள் வளர்க்கப்படுவதன் நோக்கங்கள்
    1) சூழலின் பல்வகைமை அதிகரிக்கும்
    2) குடும்பத்தின் போசணை மட்டம் மேம்படல்
    3) குடும்பத்தில் மேலதிக வருமானத்தை பெற முடிதல்
    4) மேற்கூறிய யாவும் சரியானவை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

11. ஐதுத்தீனில் காணப்படுபவை
    1) கரட்டு நார் அதிகம் கொண்டது  2) போசணை கூடியது
    3) கரட்டு நார் குறைவு  4) மேற்கூரிய யாவும் சரி

12. விலங்குகளுக்கு வழங்கப்படும் வெட்டுப்புல்லின் உயரம்
    1) $1 - 1\frac{1}{2}$ m  2) $1 - 1\frac{1}{4}$ m  3) $1 - 1\frac{3}{4}$ m  4) $1 - 2\frac{1}{2}$ m

13. மாடு, ஆடு, செம்மறியாடு ஆகியன
    1) தாவரவுண்ணி  2) ஊண் உண்ணி  3) அனைத்துமுண்ணி  4) மேற்கூறிய யாவும் பிழை

14. குஞ்சுப் பருவத்தில் கோழிகளுக்கு வழங்கப்படும் உணவுக் கலவை
    1) குரோவர்ஸ் மாஷ்  2) லேயர்ஸ் மாஷ்  3) சிக் மாஷ்  4) மாஷ்

15. வளர்பருவக் கோழிகளுக்கான உணவுக்கலவையை தயாரிக்க தேவையான அரிசித் தவிட்டின் அளவு
    1) 350g  2) 200g  3) 150g  4) 100g

16. உணவு சமைப்பவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்
    1) உணவு சமைப்பவர்
    2) சமைக்கும் இடம்
    3) பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரப்பண்பு
    4) மேற்கூறிய யாவும் பிழை

17. கேக் கலவையைத் தயார் செய்ய பொருத்தமான கரண்டி வகை
    1) உலோகக் கரண்டிகள்  2) ஒட்டாத கரண்டி வகைகள்
    3) மரக்கரண்டிகள்  4) பிளாத்திக்கு கரண்டிகள்

18. மாவாக மாற்றும் உபகரணம் அல்லாதது
    1) கருவலகு  2) ஆட்டுக்கல்  3) திருகை  4) அரைப்பான்

19. உணவைச் சமைக்கும் முன் சுவைச்சரக்குகள் சேர்த்து கொள்ளப்படுகின்ற உணவு வகை,
    1) மரக்கறி, கீரை  2) முட்டை, பருப்பு
    3) மீன், இறைச்சி  4) மேற்கூறிய யாவும் பிழை

20. மாங்காய்த் துண்டுகளின் பயன்களாக,
    1) அலங்கரிப்பு  2) கறி சமைத்தல்
    3) சட்னி தயாரித்தல்  4) மேற்கூறிய யாவும் சரியானவை

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - II

(எல்லா வினாக்களுக்கும் விடை தருக.)

01. i) மண்வளம் குன்றுவதற்கான காரணங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) உயிரித்தடைகள் மூன்றினைத் தருக. (3 புள்ளிகள்)

iii) பற்றையாக வளரும் தாவரங்கள் 5 தருக. (5 புள்ளிகள்)

iv) அலங்காரம் கிடைப்பதுடன் உணவுக்காக பயன்படும் தாவரங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

v) மண்ணரிப்பு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

02. "எமது வீடு, பாடசாலை சூழல்களை அலங்காரப்படுத்துவதன் மூலம் மனமகிழ்ச்சியையும் உளத்திருப்தியையும் பெற்றுக் கொள்ளலாம்"

i) தரையலங்கரிப்பில் பயன்படுத்தப்படும் வன்கூறுகள் 4 தருக. (4 புள்ளிகள்)

ii) தரையலங்கரிப்புச் செயன்முறையின் படிமுறைகள் 2 தருக. (2 புள்ளிகள்)

iii) தரையலங்கரிப்பு மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தை பராமரிக்கும் முறைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iv) தரையலங்கரிப்பின் போது பயன்படுத்தப்படும் விளிம்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)

v) பூக்காத தாவரங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

03. i) வீட்டு வளவில் விலங்குகள் வளர்க்கப்படுவதன் நோக்கங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) விலங்குகளை வளர்க்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii) விலங்குகளுக்கு வழங்கப்படும் ஐதுத்தீன் வகைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iv) பிண்ணாக்கு வகைகள் 2 தருக. (2 புள்ளிகள்)

04. i) விலங்குகளுக்கு சக்தி தரும் உணவில் காணப்படும் போசணைகள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) கோழியின் வளர்ச்சிப் பருவங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii) அனைத்துமுண்ணி விலங்குகள் 2 தருக. (2 புள்ளிகள்)

iv) விவசாயப் பக்க விளை பொருட்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

05. "விருப்பை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்பதற்கு பெரியோர் முதல் சிறியோர் வரை விரும்புவர்"

i) உணவு தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) உணவு சமைப்பவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii) சமையலறையின் இயல்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)

iv) கரண்டி வகைகள் 3 ஐ கூறுக. (3 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

06. i) உணவு தயாரிப்பதற்கு மூலப்பொருட்களை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) நிறமாற்றத்தை தவிர்க்கக் கூடிய முற்பரிகரிப்பு முறைகள் எவை? (2 புள்ளிகள்)

iii) வெட்டிய மேற்பரப்பு வளியுடன் தாக்கமடைந்து நிறமாற்றம் ஏற்படக்கூடிய பழவகைகள் 3 தருக. (2 புள்ளிகள்)

iv) சமயலறை உபகரணங்கள் 2 தருக. (3 புள்ளிகள்)

07. பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

i) மண்ணரிப்பை குறைப்பதற்காக பழைய இறப்பர் துடைப்பங்கள் இடப்படுகின்றன. (   )

ii) சிரட்டை சிதைவடையக் கூடிய கழிவுப் பொருளாகும். (   )

iii) நித்திய கல்யாணி பற்றையாக வளரும் தாவரம் ஆகும். (   )

iv) நேப்பியர் புல் விவசாய பக்க விளை பொருளாகும். (   )

v) உணவு தயாரிப்பவர் தொற்றுநோய் அற்றவராக இருத்தல் வேண்டும். (   )

(1X5=5 புள்ளிகள்)

08. பொருத்தமான சொல்லை இட்டு இடைவெளி நிரப்புக.

(அலங்கார மீன்கள், கோல்டன் துரன்தா, மண், வாய்க்கவசம், பிரகேரியா)

i) தாவரங்களைத் தாங்குவதும், போசணையை வழங்குவதும் ............................................ தொழிலாகும்.

ii) தாவர வேலிகளாக எக்சோரா, ............................................ வேலிகள் காணப்படுகின்றன.

iii) தாரா, முயல், ............................................ குருவிகள் ஆகியன காரணமாக சூழல் அழகு பெறும்.

iv) விலங்குகளுக்கு வழங்கப்படும் மேய்ச்சற் புற்களாக மைதானப் புல் ............................................ புல் என்பன காணப்படுகின்றன.

v) உணவு தயாரிக்கும் பொழுது இருமல் பீடித்துள்ள ஒருவர் ............................................ பயன்படுத்துதல் கட்டாயமானதாகும்.

(1X5=5 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk



agaram.lk